**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF JUDGE. KANNIYAKUMARI AT NAGERCOIL.**

**O.S. NO.297/2014**

Deposition of the witness: PW1.
Date :27.01.2026

Solemnly affirmed by Mrs.R. Sathya Bench Clerk in accordance with the provision of Act X of 1873.

| | |
|---|---|
| Name | கோர் இம்மாக் ஜீலி என்ற எழில் ரூபன் |
| Father's Name | மரிய அந்தோணி ராஜ் |
| Village | கீழ்குளம் |
| Taluk | விளவங்கோடு |
| Calling | Workshop |
| Age | 38 |

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில்1ம்வாதி ஆவேன். என் தரப்பு சாட்சியத்திற்கு நான் எழுத்து மூல பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். வழக்கறிஞருக்கு நான் சொல்லி தயார் செய்யப்பட்டு என்னால் படித்துப் பார்க்கப்பட்டு பின்பு கையொப்பம் செய்யப்பட்டது. கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.8 | 04.12.2025 | வரி ரசீது | அசல் |

பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

1ம்பிரதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தொழில் கல்வி படித்துள்ளேன் எனறால் சரி. மத்திக்கோடு ஊரில் 2004 -2006

வரை படித்தேன். 2004 ற்கு முன்பாக நான் எங்கு இருந்தேன் என்றால் செந்தரை ஆகும்.செந்தரை எனது அம்மாவின் ஊர் என்றால் சரி. எனது பெயர் என்ன என்றால் எழில் ரூபன் ஆகும். எனக்கு ஞான ஸ்தானம் செய்த பெயர் கோர் இம்மாக் ஜூலி என்ற எழில் ரூபன் ஆகும். எழில் ரூபன் என்ற பெயர் யார் வைத்தார்கள் என்றால் எனது அம்மா ஆகும். எனது பிறப்பு சான்றிதழ், கல்வி சான்றிதழ் அனைத்திலும் எழில் ரூபன் பெயரில் உள்ளது.

வழக்கு சொத்து இந்நாள் வரை எனது அப்பா பெயரில் உள்ளது என்றால் சரி. எனது பெயரில் ஆவணங்கள் பெயர்மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தேனா என்றால், 2012 ல் 2 முறை நடவடிக்கை எடுத்தேன். என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் நான் ஒருசிலரிடம் விசாரித்தேன். அந்த அலுவலகத்தின் பெயர் எனக்கு தெரியாது. அவர்கள் வழக்கு இருப்பதால் வழக்கு முடியட்டும் என்று கூறினார்கள். வாசாஆ 1 ஆவணத்திற்கு அசல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த அசல் ஆவணம் என்னிடம் இல்லை. எனது சித்தப்பாவிடம் உள்ளது.

வாசாஆ 1 ன் அசல் 1 ம் பிரதியிடம் உள்ளது என்ற விவரத்தை நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரி. வாசாஆ 1 ஆவணத்தில் எனது அப்பாவின் காலத்திற்கு பிறகு கோர் இம்மாக் ஜூலி மட்டும் தவசில் சொத்தை அடையை நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் காலத்திற்கு பிறகு என் பிள்ளைகளுக்கு என்று எழுதப்பட்டுள்ளது. என் காலத்திற்கு வழக்கு சொத்தை விற்க, மாற்ற எனக்கு அனுமதி இல்லை. வாசாஆ 1 ஆவணத்தின் விவரம் எப்போது எனக்கு தெரியும் என்றால் 25.10.2004 ல் ஆவணம் எழுதிய தேதியிலே எனக்கு தெரியும். எனது தாத்தா எனக்கு சொன்னார். அந்த சமயத்தில் நானும் எனது அம்மாவும் செந்தரையில் இருந்தோம்.

எனது அம்மா, எனது அப்பாவை பிரிந்து வாழ்ந்து வந்தோம் என்றால் சரியல்ல. எனது அப்பா மேலப்பெருவிளையில் வாழ்ந்து வந்தார் என்றால் சரி. அவர் எனது தாத்தா வீட்டில்

தான் வசித்தார். எனது அப்பாவிற்கு மனநோய் எப்போது இருந்தது என்றால் 1985 அவர்களது திருமணத்திற்கு சில காலத்திற்கு முன்பே இருந்தது. அவர் வேலை பார்த்த ரயில்வே பணியில் இருந்து நீக்கிவிட்டார்கள். மனநோயால் எனது அப்பா பாதிக்கப்பட்டதற்கு எதாவது ஆவணம் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியாது. ஆவணம் எதும் இல்லை. அதை நிருபிக்க எதாவது சாட்சி இருக்கா என்றால் எனது அம்மா உள்ளார். எனது அம்மா மற்றும் அப்பா குடும்பத்தார் உள்ளார்கள்.

வாசாஆ 1 ஆவணத்தில் எனது அப்பா மனநோய் குறித்து எழுதியுள்ளதா என்றால் இல்லை. எனது அப்பா மனநோயால் பாதிக்கப்பட்டதால் தான் நானும், எனது அம்மாவும் பிரிந்து இருந்தோம் என்றால் சரியல்ல. எனத அப்பா வேலைக்கு சென்று சாப்பாடு போடமாட்டார். அதனால் வேறு இடத்திற்கு சென்று விட்டோம். 1 ம் பிரதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. வாசாஆ 1 ஆவண நகலை யார் எடுத்து கொடுத்தார் என்றால்  எனது அம்மா ஆகும். சுரேஷ் என்பவர் யாா என்றால் எனக்கு தெரியாது. எனது அம்மா வாசாஆ 1ன் நகலை எடுத்து இந்த வழக்கு தாக்கல் செய்ய அறிவுறுத்தினார் என்றால் சரி.

எனது அப்பாவின் மனநோய்க்கு என்ன சிகிச்சை எடுத்தார் என்றால் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். உண்மையில் எனது அப்பா நல்ல மனநிலையில் உடல் ஆரோக்கியத்துடன் இருந்தார் என்றாலும் அவருடன் வாழ விருப்பம் இல்லாமல் குழந்தையாக இருக்கும் போது பாம்பேய் அழைத்துசென்று அங்கு வாழ்ந்தோம் என்றால் சரியல்ல. எனது அப்பா இறந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் . மோரிஸ் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை கொடுத்தோம். அதற்கான ஆவணங்கள் என்னிடம் இல்லை. 2014 ல் எனது அப்பா இறந்தார்.

எனது அப்பாவிற்கு இளைப்பு நோய் (விசிங்) இருந்தது இறக்கும் தருவாயில்

அவருக்கு மனநோய் சரியாகிவிட்டது என்றால் சரியல்ல. உண்மையில் எனது அப்பாவை சித்தப்பாவும், பாட்டியும் கவனித்துவந்தார்கள் என்றாலும், வீட்டீலும், மோசிஸ் மருத்துவமனையிலும் பார்த்துவந்தார்கள் என்றாலும் சரியல்ல. 16.07.2014 ல் மதியம் 12 மணி அளவில் மேலப்பெருவிளை வீட்டில் இருந்து மோசிஸ் மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம்.

வாசாஆ 1 ஆசவணத்தில் எழில் ரூபன் என்ற என்னுடைய பெயருக்கு ஏழுதப்படவில்லை என்றாலும் அதனால் இந்த வழக்கு தாக்கல் செய்ய எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தை நான் பார்த்துள்ளேனோ எனறால் பார்த்துள்ளேன். தற்போது நான் அங்கு தேங்காய் வெட்டி வருகிறேன். வழக்குக் சொத்து மற்றும் கூடுதல் சொத்துகள் சேர்ந்து 72 ½ சென்ட் சொத்து எனது அப்பாவின் அப்பாவிற்கு பாத்தியம் என்றால் சரி. தற்போது 67 ½ சென்ட் மட்டுமே உள்ளது என்றால் சரி. அந்த சொத்துகள் சம்மந்தமாக எனது தாத்தா உயில் எழுதிவவைத்தார் என்றால் சரி. 1998 ல் எழுதிய உயிலை 2001 ல் ரத்து செய்து 2004 ல் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதினார்.

அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் எனது அப்பாவின் சகோதாரர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரி. 67 ½ சென்ட் சொத்து கிழமேல் நிளத்தில் உள்ளது என்றால் சரி. மேற்கே உள்ள முதல் பிளாட் 11 சென்ட் கிருஸ்து தாஸ் க்கும், 2 வது பிளாட் 14 ½ சென்ட் 1ம் பிரதிக்கும் அடுத்து உள்ள 13 ½ சென்ட் எனது அப்பாவிற்கும், அடுத்து உள்ள 12 சென்ட் ஜான் சேவியர்க்கும் , மேற்படி 1ம் பிரதி சொததிற்கும், ஜான்சேவியர் சொத்திற்கும் இடையே உள்ள சொத்து 13 ½ சென்ட் சொத்து வழக்கு ஏ பட்டிகை சொத்து என்றால் சரி.

வழக்கு சொத்தில் எத்தனை சொத்துகள் உள்ளது என்றால் 1 சொத்து உள்ளது. வழக்கு பிராதின் விவரங்களை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். பிராது

ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதப்பட்டுள்ளது. அதில்தான் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரி. பிராதுடன் என்னனென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்று படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். மொத்தம் 10 ஆவணங்கள் ஆகும். என்னென்ன ஆவணங்கள் என்றால் குறிப்பிட்டு தெரியாது.

இந்த வழக்கில் ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டு அளந்து பார்த்தார் என்றால் சரி. தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அறிக்கை தமிழில் இருந்தது. அந்த தமிழில் உள்ள ஆணையர் அறிக்கையை நான் எனது தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரி. அதில் எத்தனை சொத்துகள் காண்பித்துள்ளார் என்றால் நான் பார்க்கவில்லை.

1ம் பிரதிக்கு எத்தனை சொத்துகள் உள்ளது என்று ஆணையர் அறிக்கையில் காண்பித்துள்ளாரா என்றால் 14 ½ சென்ட் சொத்துகள் காட்டியுள்ளார். ஆணையர் வந்து ஸ்தலத்தை பார்வையிட்ட போது ஏ பட்டிகை சொத்து ம் அதற்கு கிழக்கே உள்ள சொத்தும் ஒரே கண்டமாக இருந்தது என்றால் சரி. ஏ பட்டிகை சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ள சொத்தில் அவர் 2005 ம் ஆண்டில் வீடும், சுற்றி காம்பவுண்ட சுவரும் வைத்தார் என்றால் சரியல்ல. வீடு மட்டுமே வைத்தார். கிழக்கு பக்கம் காம்பவுண்ட சுவர் வைக்கவில்லை. 2005 ம் ஆண்டு நான் எங்கு இருந்தேன் என்றால் செந்தரையில் இருந்தேன்.

2005 ல் 1 ம் பிரதி வீடு கிரகபிரதேசத்தின் போது நானும், எனது அம்மாவும் கலந்து கொண்டோம் என்றால் சரி. அப்பபோது 1 ம் பிரதியின் வீட்டிற்கு, வடக்கு பக்கமும், கிழக்கு பக்கமும் காம்பவுண்ட் சுவர் கட்டவில்லை. ஏ பட்டிகை சொத்தில் 6 தென்னைமரங்கள் இருக்கிறது. வாசாஆ 1 ஆவணத்தில் மேற்படி 6 தென்னைமரங்களை சொல்லவில்லை என்றாலும் எனது பிராதிலும், நிருபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரி.1 மரம் 30 வயதும் மற்ற மரங்கள் 10 முதல் 15 வயது இருக்கும்.

அந்த மரங்களை ஆணையர் வந்து பார்வையிட்டு குறித்தாரா என்றால் எனக்கு தெரியாது. 2 மாதத்திற்கு 1 முறை தேங்காய் வெட்ட செல்வேன் என்றால் சிலமுறை 3 அல்லது 4 மாதங்களுக்கு 1 முறை செல்வேன். குறைந்தது 3 மாதத்திற்கு 1 முறை நான் வழக்கு சொத்தை பார்வையிட்டு வருவேன் என்றால் சரி. செந்தரையில் உள்ள வெனிஸ்லாஸ் என்பவரை தேங்காய் வெட்ட அழைத்து கொண்டு வருவேன். செந்தரையிலிருந்து வழக்கு சொத்து சுமார் 30 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரி.

காம்பவுண்ட சுவரரை எந்த தேதியில் நான் பாத்தேன் என்றால் 2012 ஜீன் மாதத்தில் பார்த்தேன். அப்போது காம்பவுண்ட சுவரை கட்டிக்கொண்டிருந்ததாரா அல்லது கட்டி முடித்துவிட்டாரா என்றால் கட்டி முடித்துவிட்டார்., பூச்சு வேலை மட்டும் செய்யவில்லை .3 -4 மாதத்திற்கு முன்பு வரை காம்பவுண்ட சுவர் பூச்சு போடவில்லை. காம்பவுண்ட சுவர் கட்டியதற்கு ஆசாரிபள்ளம் காவல் நிலையத்தில் புகார் நான் கொடுத்தேன். என்ன தேதி என்றால் 2014 ல் கொடுத்தேன் மாதம், தேதி ஞாபகம் இல்லை. புகாரின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி.

அந்த வழக்கு சொத்திற்கு போலிசார் வந்து விசாரித்து உரிமையியல் வழக்கு என்பதால் நீதிமன்றத்தை அனுக சொன்னார்கள். மேற்படி போலிஸ் விசரணை எனது பிராதிலோ., நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லைஎன்றால் சரி. உண்மையில் 2005 ல் 1 ம் பிரதி வீடும், காம்பவுண்ட சுவர் வைத்துள்ளார் என்றாலும் நான் வழக்கிற்காக 2012 ல் , 2014 ல் காம்பவுண்ட சுவர் எடுத்ததாக சொல்லி காலவதி தோசத்தை மறைக்க பொய்யான வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. 2012 ல் வீடு மட்டுமே இருந்தது என்பதற்கும் காம்பவுண்ட சுவர் இல்லை என்பதை காட்ட புகைப்படம் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி.

வாசாஆ 5 புகார் எனது அம்மா கொடுத்தது என்றாலும் நான் கொடுக்கவில்லை

என்றாலும் சரி. வழக்கு ஏ பட்டிகை சொத்து சம்மந்தமாக எந்த நடவடிக்கை எடுக்க எனது அம்மாவிற்கு உரிமை இல்லை என்றால் சரிதான். செட்டில்மெண்ட் ஆவணத்தில் சொல்லிய நிபந்தனையை நான் பூர்த்தி செய்யாததால் ஆவணத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும் அந்த ஆவணம் முழுமையுடயை ஆவணம் என்றாலும் சரியல்ல.

வாசாஆ 1 ஆவணம் என் பெயருக்கு சேரவில்லைஎன்றாலும் அதனால் தான் நான் பட்டாவில் பெயர் மாற்றம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நீமாசாஆ 1 , 2 ஆவணத்தில் ஆணையர் 1 ம் பிரதியின் ஆவணங்களை பார்வையிடாமல் தவறுதலாக அறிக்கை செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் கோரிய எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல. வழக்கின் விவரங்கள் முழுமையாக தெரியாமல் இந்த வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.